சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–2012 ஆம் ஆண்டு –25 புதிய ஆதிதிராவிடர் நல பள்ளி/கல்லூரி விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை

அரசாணை (நிலை) எண்.22 நாள்:19.3.2012

பங்குனி 06, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்கப்பட்டது

ஆணையர், ஆதிதிராவிடர் நலன் கடித எண்.த1/12085/2011
நாள்.1.6.2011 மற்றும் 29.11.2011

-----

ஆணை:–

2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது புதியதாக 25 ஆதிதிராவிடர் நல விடுதிகள் துவங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2011–2012–ஆம் ஆண்டில் 1250 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் புதியதாக 25 மாணவர்/மாணவியர் விடுதிகள் துவங்க ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் தம்முடைய கருத்துருவில், 25 புதிய விடுதிகள் துவங்குவதற்கு 97 இடங்களின் பெயர்களை பரிந்துரைத்து பட்டியலுடன் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். மேலும் அதனுடன் பொது மக்கள்/அரசியல் பிரமுகர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள்/ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து அரசுக்கு நேரடியாக அனுப்பப்பட்ட மனுக்களையும் ஆய்வு செய்து, அவசியம் கருதி கீழ்க்கண்ட 21 பள்ளி மாணவர்/மாணவியர் விடுதிகளும், 4 கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிகளும் 2011–2012 –ஆம் ஆண்டு முதல் துவங்க அரசு ஆணையிடுகிறது.

2011–2012 ஆம் ஆண்டு முதல் துவங்க உள்ள 25 விடுதிகளின் விவரம்
(21 பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகள்)

| வ. எண். | மாவட்டம் | விடுதி துவங்கப்படவுள்ள இடம் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1. | வேலூர் | பீஞ்சமந்தை | மாணவர் விடுதி |
| 2. | காஞ்சிபுரம் | நெல்லிக்குப்பம் கிராமம் | மாணவர் விடுதி |
| 3. | காஞ்சிபுரம் | செய்யூர் | மாணவியர் விடுதி |
| 4. | அரியலூர் | உடையார்பாளையம் வெத்தியார் வெட்டு | மாணவர் விடுதி |
| 5. | அரியலூர் | திடீர்குப்பம் | மாணவியர் விடுதி |
| 6. | திருவண்ணாமலை | கண்ணகுருக்கை | மாணவர் விடுதி |
| 7. | திருவண்ணாமலை | கலசபாக்கம் | மாணவியர் விடுதி |
| 8. | சிவகங்கை | வேதியரேந்தல் | மாணவியர் விடுதி |
| 9. | புதுக்கோட்டை | பெருங்களூர் | மாணவர் விடுதி |
| 10. | புதுக்கோட்டை | மேலத்தானியம் | மாணவர் விடுதி |
| 11 | புதுக்கோட்டை | மாஞ்சான் விடுதி மறமடக்கி | மாணவர் விடுதி |
| 12. | புதுக்கோட்டை | ஒடுகம்பட்டி | மாணவியர் விடுதி |
| 13 | புதுக்கோட்டை | கறம்பக்குடி | மாணவியர் விடுதி |
| 14. | திருநெல்வேலி | விஸ்வநாதப்பேரி பாகம் I கிராமம் | மாணவியர் விடுதி |
| 15. | இராமநாதபுரம் | அபிராமம் | மாணவியர் விடுதி |
| 16 | சேலம் | பெத்தநாயக்கன் பாளையம் | மாணவர் விடுதி |
| 17. | கோயம்புத்தூர் | எஸ்.புங்கம்பாளையம் | மாணவர் விடுதி |
| 18. | தருமபுரி | அனுமந்தபுரம் | மாணவர் விடுதி |
| 19. | கிருஷ்ணகிரி | கல்லாவி அரசு பள்ளி | மாணவியர் விடுதி |
| 20. | நாமக்கல் | நாமகிரிபேட்டை | மாணவியர் விடுதி |
| 21. | கரூர் | கொசூர் | மாணவியர் விடுதி |

(4 கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிகள்

| வ. எண். | மாவட்டம் | விடுதி துவங்கப்படவுள்ள இடம் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1. | வேலூர் | ஆற்காடு | மாணவியர் விடுதி |
| 2. | சிவகங்கை | காரைக்குடி | மாணவியர் விடுதி |
| 3. | பெரம்பலூர் | பெரம்பலூர் | மாணவர் விடுதி |
| 4. | கடலூர் | கடலூர் | மாணவியர் விடுதி |

3. மேலும், இப்பள்ளி கல்லூரி விடுதிகளுக்கு ரூ.9300–34800+ Grade Pay ரூ.4400 என்ற சம்பள விகிதத்தில் 25 பி.எட். பட்டதாரி காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களும், ரூ.4800–10000 Grade Pay 1300/– என்ற சம்பள விகிதத்தில் 25 சமையலர் பணியிடங்களும் மற்றும் 25 காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்களும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

4.மேலே பத்தி 2–ல் புதியதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 25 விடுதிகளுக்கு பணியாளர்களுக்கான சம்பளத்திற்காக ரூ.2,16,60,900/– (ரூபாய் இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து அறுபதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) இதர தொடர் செலவினத்திற்காக ரூ.76,56,070/–ம் (ரூபாய் எழுத்திஆறு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுபது மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ.39,71,750( ரூபாய் முப்பத்தி ஒன்பது இலட்சத்து எழுபத்தொன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.3,32,88,720/– (ரூபாய் மூன்று கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II மாநிலத் திட்டம் – **KD**- மாணவரில்லங்கள்"

| வ.எண். | செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ | தொடராச் செலவினம் ரூ |
|---|---|---|---|
| 1 | 01. சம்பளங்கள்<br>01. அடிப்படை சம்பளங்கள்<br>(து.தொ.கு.2225 01 277 KD 0101) | 1,31,55,000 | -- |
| 2. | 02 மருத்துவப்படி<br>(து.தொ.கு.2225 01 277 KD 0129) | 90,000 | -- |
| 3. | 06 வீட்டுவாடகைப்படி<br>(து.தொ.கு.2225 01 277 KD 0165) | 6,24,000 | -- |
| 4. | 08. நகர ஈட்டுப்படி<br>(து.தொ.கு.2225 01 277 KD 0183) | 1,62,000 | -- |

| | | | |
|---|---|---|---|
| 5. | 03. அகவிலைப்படி<br>01. அகவிலைப்படி<br>(கு.தொ.கு.2225 01 277 KD 0316) | 76,30,000 | --- |
| 6. | 05. அலுவலகச்செலவுகள்<br>05. அறைகலன்<br>(கு.தொ.கு.2225 01 277 KD 0558) | – | 17,00,000 |
| 7. | 06. வாடகை, கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(கு.தொ.கு.2225 01 277 KD 0610) | 9,00,000 | --- |
| 8. | 19 இயந்திரமும் சாதனமும்<br>01 வாங்குதல்<br>(கு.தொ.கு.2225 01 277 KD 1913) | – | 3,08,000 |
| 9 | 24 பொருள்களும் வழங்கலும்<br>(கு.தொ.கு.2225 01 277 KD 2403) | 10,970 | 15,65,750 |
| 10 | 34 ஏனைய செலவுகள்<br>02 நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(கு.தொ.கு.2225 01 277 KD 3420) | – | 2,42,000 |
| 11 | 46 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள்<br>(கு.தொ.கு.2225 01 277 KD 4607) | – | 1,56,000 |
| 12 | 67உணவளிக்கும்/உணவுச் செலவுகள்<br>09 ஏனையவை<br>(கு.தொ.கு.2225 01 277 KD 6794) | 59,56,000 | -- |
| 13 | 99 பல்வகை<br>(கு.தொ.கு.2225 01 277 KD 9906) | 7,89,000 | --- |
| | மொத்தம் | 2,93,16,970 | 39,71,750 |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. தொடராச் செலவினத்தில் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிப்பப்படுகிறது.

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை | |
|---|---|---|---|
| | | பள்ளி விடுதி | கல்லூரி விடுதி |
| 1 | 5 லிட்டர் ஈர அரவை இயந்திரம் | 8,000 | 10,000 |
| 2. | சமையல்பாத்திரங்கள் | 20,000 | 40,000 |
| 3. | நூலக வசதி | 10,000 | 8,000 |
| 4. | விடுதி அலுவலகத்திற்கு தேவையான அறைகலன்கள் | 40,000 | 40,000 |
| 5. | சமையல்எரி வாயு இணைப்பு | 30,000 | 30,000 |
| 6. | 22 லிட்டர் குக்கர் | 5,000 | 5,000 |
| 7. | போர்வைகள் | 6,250 | 6,250 |
| 8. | பாய் | 2,500 | --- |
| 9. | வண்ணத்தொலைக்காட்சி பெட்டி | 4,000 | 4,000 |
| 10 | விளையாட்டு சாதனம் | | 2,000 |
| 11 | எடை இயந்திரம் | | 2,000 |
| 12. | மாணவர்களுக்கு தேவையான அறைகலன்கள் | | 1,75,000 |

8. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் பணிபுரிவோர் அடிப்படை சம்பளம் மற்றும் விதிமுறைகளின்படி பிற படிகளையும் பெறத் தகுதியுடைவர்கள் ஆவார்கள். மேலும் புதிதாக துவங்கப்படும் 25 விடுதிகளும் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதற்கும் அனுமதியளித்து ஆணையிடப்படுகின்றது.

9. இது ஒரு 'புதுப்பணி' குறித்த (New Scheme) செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்யத் தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் 2011–2012 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை (வரவு–செலவு பொது I)துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 2–ல் கண்டுள்ள 25 புதிய விடுதிகளும் முறையாக துவங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண் 100/டி.எஸ்.(வி.எஸ்)/12 நிதித் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) துறை நாள்:08.03.2012, அ. சா. கு. எண்.13864/நிதித் (மை.ம.ஆ.பி) துறை, நாள்:09.03.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.1815 (ஆயிரத்து எண்ணூற்று பதினைந்து)ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAB), சென்னை–9.
நகல்:–
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை (CMPC)/ஆதி(ம)பந, சென்னை–9.
நிதி (வ.செ.பொI/வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.2/
ஆதிந.3/ஆதிந.7/ஆதிந.8/ப.மே.1/ப.மே.2/க.மாபா) துறை, சென்னை–9.
இருப்புகோப்பு/உபரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.